சுருக்கம்

போக்குவரத்துத்துறை – போக்குவரத்துக் கழக பேருந்துகளின் விபத்துகளால் உயிரிழந்தோர்களது வாரிசுகளுக்கும் மற்றும் பலத்த காயமடைந்தோருக்கும் விபத்து இழப்பீட்டுத் தொகையினை வழங்குதல் –விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியத்தினை ரூ.60,00,00,000/– வழங்கி (ரூ.30,00,00,000/– அரசின் பங்காகவும்; மற்றும் எஞ்சிய ரூ.30,00,00,000/– அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பு நிதியாகவும்) உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

போக்குவரத்து (அ) துறை

**அரசு ஆணை (நிலை) எண்: 16** **நாள்: 22.02.2016**

மன்மத, மாசி 10
திருவள்ளுவர் ஆண்டு 2047

**படிக்கபட்டவை:**

1) அரசு ஆணை (நிலை) எண்.183, போக்குவரத்து (அ) துறை, நாள் 19.7.2010.
2) அரசு ஆணை (நிலை) எண்.300, போக்குவரத்து (அ) துறை, நாள் 26.10.10.
3) அரசு ஆணை (நிலை) எண்.124, போக்குவரத்து (அ) துறை, நாள் 26.08.11.
4) அரசு ஆணை (நிலை) எண்.124, போக்குவரத்து (அ) துறை, நாள் 09.07.12.
5) அரசு ஆணை (நிலை) எண்.120, போக்குவரத்து (அ) துறை, நாள் 29.06.13.
6) அரசு ஆணை (நிலை) எண்.30, போக்குவரத்து (அ) துறை, நாள் 28.02.2014.
7) அரசு ஆணை (நிலை) எண்.87, போக்குவரத்து (அ) துறை, நாள் 21.07.2015.

***********

**ஆணை:**

அரசுப் போக்குவரத்து கழக பேருந்துகளின் விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, விரைவாக இழப்பீட்டுத் தொகையினை வழங்குவதற்கு, விபத்து இழப்பீட்டுத் தொகை நிதித்திட்டத்தை உருவாக்கி, மேலே, 1–இல் படிக்கப்பட்ட அரசாணையில் இதர இனங்களுடன் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசின் பங்காக ரூ.20,00,00,000/–யும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20,00,00,000/–யும் ஆண்டு தோறும் அளிக்க வேண்டும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியத்திற்காக அரசின் பங்களிப்பாக ரூ.20,00,00,000/–யும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.20,00,00,000/–யும், வழங்கி விபத்து இழப்பீட்டுத் தொகை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் செலுத்தப்பட்டு வருகிறது.

3. பார்வை–6–ல் படிக்கப்பட்ட அரசாணையில் நீதிமன்றங்களால் பிடித்து வைக்கப்பட்ட வாகனங்களை விடுவிக்க கோரி, உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு வழக்குகளுக்கு விபத்து இழப்பீட்டுத் தொகையினைப் பயன்படுத்தலாம் என, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்குச் சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டு, பார்வை–1ல் படிக்கப்பட்ட அரசாணைக்குத் திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

...... 2

4. பார்வை 7–ல் படிக்கப்பட்ட அரசாணையில் 2015–2016–ஆம் ஆண்டிற்கான அரசின் விபத்து இழப்பீட்டு தொகை பங்களிப்பு ரூ.20,00,00,000/– (ரூபாய் இருபது கோடி மட்டும்) விடுவித்து ஆணை வெளியிடப்பட்டது

5. 2015–2016–ஆம் ஆண்டு முதல் அரசின் பங்களிப்பாக ரூ.30,00,00,000/–யும் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.30,00,00,000/–யும் உயர்த்தி வழங்கி விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் செயல்படும் என மாண்புமிகு அமைச்சர் தொழில் மற்றும் போக்குவரத்து சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு செய்துள்ளதை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியத்திட்டத்திற்கு அரசின் பங்களிப்பு மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பை 2015–2016 முதல் பங்களிப்புத் தொகையை ரூ.20,00,00,000/–யை ரூ.30,00,00,000/–யாக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது. அதன்படி 2015–2016–ஆம் ஆண்டிற்கான அரசின் உயர்த்தப்பட்ட பங்களிப்பு ரூ.10,00,00,000/–ஐ (ரூபாய் பத்து கோடி மட்டும்) அந்நிதியத்திற்கு வழங்க, அரசு இதன் வழி ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று மற்றும் வரவு வைக்கப்படவேண்டும்: -

<u>பற்றுத் தலைப்பு</u> :-

“3055–00 சாலைப் போக்குவரத்து – 190 பொதுத்துறை நிறுவனங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் நிதியுதவி I. திட்டத்தில் சேராதது – AH விபத்து இழப்பீடு தொகை நிதித்திட்டத்திற்கான மானியம் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை

<u>வரவுத் தலைப்பு</u> :-

“8443-00 Civil Deposits – 800 Other Deposits – BB Deposits of Tamil Nadu Transport Development Finance Corporation Limited (TDFC)
(DPC 8443 00 800 BB 0000) (Outgo)
(DPC 8443 00 800 BB 000A) (Receipts)”

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புது துணைப் பணித் திட்டம் குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963–ல் உள்ள அட்டவணை “A” படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு–செலவு–I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு அரசு செயலாளர், போக்குவரத்து துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2015–16 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(பொ.ப.I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு அரசு செயலாளர், போக்குவரத்து துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

...... 3

8. அரசு சார்புச் செயலாளர் (போக்குவரத்து) போக்குவரத்துத்துறை, சென்னை–9 அவர்கள் பத்தி 5–ல் குறிப்பிட்டுள்ள தொகைக்கான பட்டியல் தயாரித்து சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை–9–ல் சமர்ப்பிக்கவும் மற்றும் காசோலையில் தன் வைப்பீட்டுக் கணக்கு எண்.6184513279 எனக் குறிப்பிட்டு (Account Payee Cheque in favour of PD Account of Tamil Nadu Transport Development Finance Corporation Ltd.,) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. மேற்படி திட்டத்திற்கு 2015–2016–ஆம் ஆண்டிற்கான அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் உயர்த்தப்பட்ட பங்களிப்பு தொகையான ரூ.10,00,00,000/–யினைத் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் செலுத்துமாறு அனைத்துப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10. இவ்வாணை நிதித்துறையின். அ.சா.கு.எண். 11590/16/நிதி (பொ.ப.I) துறை, நாள் 18.02.2016 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூ.நி.பே.எண்:2469 (இரண்டாயிரத்து நானூற்று அறுபத்து ஒன்பது )

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச.வி.சங்கர்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூ.பொ)**

பெறுநர்
1) நிர்வாக இயக்குநர்கள், அனைத்துப் போக்குவரத்துக் கழகங்கள்.
2) இயக்குநர், சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை–113.
3) இணை மேலாண் இயக்குநர், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை–2.
4) சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை–9.
5) சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னை–79.
6) மாநில கணக்காயர், சென்னை–18.
7) மாநில கணக்காயர், சென்னை–18. (பெயரில்)

<u>நகல்:</u>
1) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
2) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,போக்குவரத்துத்துறை, சென்னை–9.
3) போக்குவரத்து (RW) துறை, சென்னை–9. தொடர் நடவடிக்கைக்காக.
4) அனைத்துப் பிரிவுகள், போக்குவரத்துத்துறை, சென்னை–9.
5) நிதி (பொ.ப. 1/வ.செ.பொது.1/வ.செ.பொது.2) துறை, சென்னை–9.
6) உள்(போக்குவரத்து) துறை, சென்னை–9.
7) நிதி (பொ.ம்.க.) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ப.எம். கிருஷ்ணவேணி 29/2/16.
பிரிவு அலுவலர்